*4*

# ஊழியம் செய்யும் இருதயம் படைத்தோர் தேவையுடைய ஒரு சபை

## (1 கொரிந்தியர் 4:1–21)

*1 கொரிந்தியர் 4-ம் அதிகாரத்தில் விவாதிக்கும் பவுல், "எந்த மனுஷனும் எங்களைக் கிறிஸ்துவின் ஊழியக்காரரென்று ... எண்ணிக் கொள்ளக் கடவன்" என்று சொல்லி ஆரம்பித்தார். உள்ளூர் சபைகளில் பிரச்சனைகள் எழும்போது, ஏறத்தாழ எப்பொழுதுமே சபையில் உள்ள மக்கள் தங்களையே முதல் நபராகவும் இராஜ்யத்திலே முதன்மையானவர் எனும் அங்கீகாரத்தைப் பெற முற்படுவதாலும் தான். மன வெறுப்புகளுக்கு இடையே உண்டாகும் உட்பூசல்களை, வித்தியாசப்பட்ட உபதேசக் கோட்பாடுகள் என்று முன் வைத்தாலும், இந்த வித்தியாசங்களின் பின்னணியில் முக்கியத்துவம் பெற வேண்டும் என்ற ஆசையே ஏறத்தாழ எப்பொழுதும் காரணமாக இருக்கிறது.*

*உதாரணமாக, பிரசங்கியாராகிய என்னுடைய நண்பரும் நானும் ஒரு முறை பிளவுபட்ட ஒரு சிறிய சபையை ஒற்றுமைப்படுத்தும் பொருட்டு, இரண்டு மனுஷர்களை ஒப்புரவாக்க, உட்கார்ந்து பேசி முயற்சித்துக் கொண்டிருந்தோம். இந்த இரண்டு மனுஷர்களும், சபையிலே எதிரெதிரே எதிர்ப்புத் தெரிவிக்கும் இரண்டு கூட்டத்துக்கு முன்னோடிகள். பிரச்சனை என்ன? வேதாகம வகுப்புகளில் குறிப்பிட்ட ஒரு குழந்தைகளின் பாடலைப் பாடலாமா, கூடாதா என்பதுதான். இந்த வழக்கு நிந்திக்கப்படத் தக்கதாக காணப்பட்டது. ஆயினும், அந்த இரண்டு நபர்களின் உண்மையான பிரச்சனை அந்தக் குழந்தைகளின் பாடல்கள் அல்ல. மாறாக "இங்கு அதிகாரம் கொண்டிருப்பவர் யார்?" என்பது தான் - இன்னொரு வார்த்தையில் சொன்னால், "இந்த சபை குழுமத்திற்கு யார் தலைவன் என்பது தான்."*

*இதே பிரச்சனையை தம்முடைய சீஷர்களில் யார் முதன்மையானவன் எனும் போட்டி இருப்பதை இயேசு எதிர் கொண்டார். யாக்கோபும், யோவானும் இராஜ்யத்திலே முதன்மையான இடத்தைத் தேடினார்கள், அது மற்ற சீஷர்களுக்குள் விரக்தியை ஏற்படுத்தியது. (அவர்களுக்கும் "முதன்மை ஸ்தானம்" வேண்டும் என கேட்டார்கள்.) இயேசு,*

> *. . . உங்களில் எவனாகிலும் பெரியவனாயிருக்க விரும்பினால், அவன் உங்களுக்குப் பணிவிடைக்காரனாயிருக்கக்கடவன். உங்களில் எவனாகிலும் முதன்மையாயிருக்க விரும்பினால், அவன் எல்லாருக்கும் ஊழியக்காரனாயிருக்கக்கடவன். அப்படியே மனுஷகுமாரனும் ஊழியங்*

கொள்ளும்படி வராமல், ஊழியஞ்செய்யவும் அநேகரை மீட்கும் "பொருளாகத் தம்முடைய ஜீவனைக் கொடுக்கவும் வந்தார்" என்றார் (10:43-45).

கொரிந்துவிலிருந்த சபை பிரிவினையுள்ளதாயிருந்தது, அதின் அங்கத்தினர்கள் மனுஷர்களை பின்பற்றுவோராக இருந்தனர். ஆயினும் அவர்களுடைய பிரச்சனைக்கான அடிப்படை கருத்து வேறுபாடுகளே அல்ல, அதன் பின்னணியில் மேட்டிமையும் இறுமாப்பும்[1] இருந்தது - அவர்களின் இறுமாப்பை 1 கொரிந்தியரில், இந்த அதிகாரத்தில் குறிப்பிடப் பட்டுள்ள மூன்றுமுறை உட்பட, ஆறுமுறை பயன்படுத்தப் பட்டுள்ளது (4:6, 18, 19; 5:2; 8:1; 13:4 யும் காண்க).

அவர்களின் பிரச்சனையை எப்படித் தீர்ப்பது? பிரசங்கியார்களின் கடமையை புரிந்து கொள்வதில் குறைபாடுள்ளவர்களல்ல. (அதிகாரம் 3ல் விளக்கப்பட்டபடி), ஆனால் முறையான எண்ணங்களிலே அவர்கள் குறையுள்ளவர்களாயிருந்தனர். அவர்கள் எஜமானர்களாயிருப்பதை விட ஊழியர்களாயிருக்க வழி தேடியிருக்க வேண்டும். இந்தத் தேவையை புரிந்து கொண்ட பவுல், 1 கொரிந்தியர் 4ல் ஊழியக்காரனுக்கு இருக்க வேண்டிய இருதயத்தைக் குறித்து விளக்கமளிக்கிறார். இன்றைய உள்ளூர் சபைகள் தங்களது பிரச்சனைகளைத் தீர்க்க விரும்பினால், அவர்கள் எப்படி ஊழியக்காரர்களாயிருப்பது என்பதை ஜாக்கிரதையாக பரிசீலித்தால் நன்கு செயல்படலாம்.

ஒரு ஊழியக்காரனுடைய இருதயம் எப்படியிருக்க வேண்டும்? அதிகாரம் 4ல் ஒரு ஊழியக்காரனின் கடமை, ஆத்துமா மற்றும் குறிக்கோள்களை முன் வைக்கிறார்.

## உக்கிராணத்துவம்:
## ஊழியக்காரனின் கடமை

அதிகாரம் 4ல் ஒரு ஊழியக்காரனின் கடமை - பூமியிலே அவனுக்குக் கொடுக்கப்பட்டுள்ள பொறுப்பு - உக்கிராணத்துவம் என்று நாம் காண்கிறோம் (4:1-5).

பவுல் தன்னையும் அப்பொல்லோவையும் "கிறிஸ்துவின் ஊழியக்காரர்கள்" என்று விளக்கமளித்தார். மேலும் தொடர்ந்து, "தேவனுடைய இரகசியங்களின் உக்கிராணக்காரர்" என்றும் குறிப்பிட்டார் (4:1).

### ஒரு உக்கிராணக்காரனின் பொறுப்பு

உக்கிராணக்காரன் என்பதன் பொருள் என்ன?

(1) ஒரு உக்கிராணக்காரன் என்பவன் மற்றவர்களுக்குரிய சிலவற்றின் பொறுப்பு ஒப்படைக்கப் பட்டவனாக இருக்கிறான். அவனது பொறுப்பில் வைத்திருப்பவைகளெல்லாம் உண்மையில் அவனுடையதல்ல. பவுலும் மற்றவர்களும் தேவனுடைய இரகசியங்களான (மஸ்டேரியன்) - ஜனங்களின் ஆத்துமாக்களை இரட்சிக்கும் தேவனுடைய திட்டத்தை செயல்படுத்தும் உக்கிராணத்துவத்தைப் பெற்றவர்கள். பவுல் பயன்படுத்தும் இரகசியங்கள் எனும் பதம் மொழிபெயர்க்கப்பட்டபடி (வசனம் 1), மனிதனை இரட்சிக்க

கிறிஸ்து சிலுவையில் அறையப்பட்டதைக் குறிக்கிறது. இது யுகங்களினூடே தேவனுடைய பெரிதான திட்டம், "காலம் நிறைவேறின போது நிறைவேறியது."[2] அவரால் ஏவப்பட்ட பேச்சாளர்கள் இந்தத் திட்டத்தை மற்றவர்களுக்கு வெளிப்படுத்தும் பொறுப்பைப் பெற்றிருந்தார்கள்.

(2) தனக்கு கொடுக்கப் பட்டது அதன் உரிமையாளருக்கு பிரயோஜனத்தைக் கொடுக்கத்தக்க வகையில் ஒரு உக்கிராணக்காரன் அதை பயன்படுத்த வேண்டும். அவர் தனக்காக வேலை செய்வதில்லை, தனது எஜமானனுக்காக வேலை செய்கிறார். பவுலும் அப்பொல்லோவும் தேவனுக்கு மகிமையைக் கொண்டு வருவதற்காக, தேவவசனத்தை அறிவிக்க வேண்டியவர்களாய் இருந்தார்கள்.

(3) ஒரு உக்கிராணக்காரன் நம்பிக்கைக்குப் பாத்திரனாக இருக்க வேண்டும் (4:2). அதாவது, தன்னை நம்பி ஒப்படைக்க பட்டவைகள் தன்னுடைய எஜமானனுக்கு நன்மை பயப்பவைகளாக இருக்க பயன்படுத்த வேண்டியதை எதிர்பார்க்கிறது. உக்கிராணக்காரனின் வேலைகளில் அளவீடு உக்கிராணக்காரனின் சொந்தப் பிரயாசங்கள், சுய நன்மைகளுக்காக அல்ல, அவனுடைய வேலையின் நன்மைகள் அவனுடைய எஜமானனுக்கே போய்ச் சேர்கிறது.

(4) ஒரு உக்கிராணக்காரன் அவனுடைய உண்மைத்தன்மையை கணக்கொப்புவிக்க கேட்கப் படுவான்.

**ஒரு உக்கிராணக்காரனின் மதிப்பீடு**

உக்கிராணக்காரன் நம்பிக்கைக்கு பாத்திரவானா இல்லையா என்று யார் தீர்மானிக்க வேண்டும்? பவுல் பின்வரும் கருத்துக்களைக் குறிப்பிடுகிறார்:

<u>*மற்றவர்கள் நம்முடைய நம்பிக்கைக்குப் பாத்திரவான்களா என்ற தகுதியை நியாயந்தீர்க்கமாட்டார்கள்.*</u> பவுல், "ஆகிலும் நான் உங்களாலேயாவது, மனுஷருடைய நியாய நாளின் விசாரணையினாலேயாவது தீர்ப்பைப் பெறுவது எனக்கு மிகவும் அற்பக் காரியமாயிருக்கிறது" என்றார் (4:3அ). மற்றவர்களின் தீர்ப்பு பவுலுக்கு எந்த வித்தியாசத்தையும் ஏற்படுத்த வில்லை. எப்படியாயினும், இந்த வார்த்தைகளை பவுல் கூட்டிச் சொல்வதால், கொரிந்து சபையில் இருந்த சிலர் நியாயந்தீர்த்து, அவரை நம்பிக்கைக்குப் பாத்திரமானவரல்ல என்று குற்றப் படுத்துமளவுக்கு எதிரிகளும் குறை சொல்பவர்களும் இருந்துள்ளனர் என்று நம்மை நம்ப வைக்கிறது. இதற்கு பவுலின் மறு மொழி, அவர்கள் என்னைக் குறித்து என்ன நினைக்கிறார்கள், என்ன சொல்லுகிறார்கள் என்பது "எந்த வித்தியாசத்தையும் ஏற்படுத்துவதில்லை; அவர்கள் எனக்கு நியாயாதிபதிகளல்ல," என்கிறார்.

<u>*நமது நம்பிக்கைக்கு பாத்திரவான்களின் தகுதியைக் குறித்து நம்முடைய சுயத்தீர்ப்பும் சரியானதல்ல.*</u> "நானும்" என்று ஆரம்பித்து "என்னைக் குறித்துத் தீர்ப்பு சொல்லுகிறதில்லை," என்னிடத்தில் நான் யாதொரு குற்றத்தையும் அறியேன்; அதினாலே நான் நீதிமானாகிறதில்லை என்றார் அவர் (4:3ஆ, 4அ). நல் மனசாட்சியை உடையவராக ஒருவர் இருப்பது நல்லதுதான், ஆனால் அது தேவனை மாத்திரமே பிரியப்படுத்துவதற்கான உத்திரவாதமல்ல.

<u>*ஏதோ ஒரு நாளில் கணக்கொப்புவிக்கும்படி தேவன் நம்மை அழைப்பார் என்பது தான் முக்கியமான விஷயம்*</u> (4:4, 5). நமது உக்கிராணத்துவத்தைக் குறித்து உண்மையான தீர்ப்பு செய்வது மற்றவர்களோ, நமக்கு நாமோ அல்ல,

ஆனால் தேவன் தான். அவரே முழுமையான அதிகாரம் பெற்ற நியாயாதிபதி- அவருக்கே நாம் நமது உக்கிராணத்துவத்துக்காக கணக்கு ஒப்புவிக்க வேணடும். கர்த்தர் மறுபடியும் வரும் பொழுது அவர் நியாயத்தீர்ப்பு செய்வார். அவருக்கு முன்பாக எதுவும் மறைந்திருக்க மாட்டாது. நமது எண்ணங்களையெல்லாம் அவர் அறிந்திருக்கிற படியால், மனுஷருடைய இருதயங்களையும் அவர் நியாயம் விசாரிப்பார்.

தேவனுடைய ஊழியக்காரர்களாக, நம்மை நாம் உக்கிராணக்காரர்களாகப் பார்க்க வேண்டுமே யொழிய, நம்முடைய கட்டுப் பாட்டில் இருப்பவை எல்லாவற்றிற்கும், நாமே எஜமானர்களல்ல: நம்முடைய நேரம், தாலந்துகள், நம்முடைய பணம் ஆகிய அனைத்துக்கும் உக்கிராணக்காரர்கள் மட்டுமே. தமது மகிமைக் கென்று தேவன் நம்மிடம் ஒப்படைத்துள்ளவைகளையெல்லாம் நாம் பயன்படுத்தும்படி தேடுவது தான் பலனளிக்கும். ஒரு உக்கிராணக்காரனாக உங்களுக்கு ஒப்புக் கொடுக்கப்பட்ட கடமையில் நீங்கள் உண்மையுள்ளவர்களாயிருக்கிறீர்களா?

## தாழ்மை: ஊழியனின் ஆத்துமா

ஊழியக்காரனின் ஆத்துமா - அவர் ஊழியம் செய்ய தனது கடமையை நிறைவேற்ற உதவும் ஆவி - தாழ்மையானது (4:6-21).

பவுல் தன்னையும் அப்பொல்லோவையும் உதாரணமாகப் பயன்படுத்துகிறார். அவருடைய வாக்குமூலங்கள் அவருக்கும், மற்ற ஒவ்வொருவருக்கும் பயன்படுத்தப் பட்டது. பவுல் "எழுதப்பட்டதற்கு மிஞ்சி [அல்லது அப்பால்] எண்ண வேண்டாம்" என்று கொரிந்தியர்களை எச்சரித்தார் (4:6). "எழுதப்பட்டது" என்பது வழக்கமாக பழைய ஏற்பாட்டில் எழுதப்பட்டதை மட்டும் பொதுவாகக் குறிப்பிடாமல், தனது நிருபத்தில் எழுதப்பட்ட வசனங்களை குறிப்பாக சுட்டிக்காட்டி அவர்களுடைய கவனத்தை அதற்குத் திருப்புகிறார்.

கொரிந்தியர்கள் பழைய ஏற்பாடு போதிக்கும் ஞானத்யையும், தேவனுடைய ஊழியர்களையும், பெருமைகளையும் புரிந்து கொண்டிருப்பார்களேயானால் அவர்கள் பிரிந்திருக்க மாட்டார்கள் என்பதே இதன் கருத்து. எதிர்பார்க்கும் பிரதிபலனாக அவர்கள் தங்களில் ஒருவருக் கொருவர் எதிராக கொண்டிருக்கும் இறுமாப்பை விட்டு விடுவார்கள். மற்றவர்களை மட்டம் தட்டி, தங்களுடைய பிரியமான பிரசங்கியார்களைக் குறித்தும், தங்களைக் குறித்தும் பெருமையாய் பேசுவதை களைந்து போடுவார்கள்.

வசனங்கள் 7 முதல் 21 வரை கொரிந்து பட்டணத்து பிரச்சனைகளுக்கான நம்பிக்கையை அதிகரிக்கச் செய்வது போல் காணப்படுகிறது. இந்த வசனப் பகுதி, கொரிந்துவிலிருந்தவர்கள் மற்றவர்களைக் குறித்து பெருமை பாராட்டுவதோடல்லாமல் அவர்களில் தனிப்பட்ட ஒவ்வொருவரும் அவரவருடைய ஆவிக்குரிய சாதனைகளை மேட்டிமையாய் பேசிக் கொண்டிருந்ததாக யோசனையாகச் சொல்லுகிறது. பவுல் மூன்று புத்திமதிகளை எடுத்துக் கூறி அவர்கள் தங்களிலுள்ள உயர்வு மனப்பான்மையை விட்டு, தாழ்மைப்படும்படி ஊக்கமளிக்கிறார்.

"தேவனை நீ சார்ந்திருப்பதை ஏற்றுக்கொள்" (காண்க 4:7). அவர்கள் கொண்டுள்ள அனைத்துமே தேவனால் அவர்களுக்குக் கொடுக்கப் பட்டது

*என்பதை நினைவுபடுத்துகிறார். அவர்களின் நற்குணமோ, பெலமோ ஞானமோ எதையும் அவர்களுக்கு கொடுக்கவில்லையாதலால் அவர்கள் பெருமை பாராட்டுவதற்கான முகாந்திரம் எதுவுமில்லை.*

*"அப்போஸ்தலர்களின் தியாகத்தை பாராட்டுங்கள்" (4:8-13-ஐக் காண்க). தாழ்மையை வெளிப்படுத்துவதற்குப் பதிலாக (அவர்கள்) கொரிந்தியர்களில் சிலர் இறுமாப்பையே வெளிப்படுத்தினர். (4:18, 19 ஐயும் காண்க.) பவுல் அவர்கள் தங்களை "நிறைந்தவர்களாக" அவர்களுடைய மேட்டிமைக்கு பழிச் செல்லாக மறு மொழி அளிக்கிறார்.[3] "இராஜாக்களைப் போல" "ஐசுவரியம்" படைத்தவர்களாக தங்களை எண்ணிக்கொண்டார்கள். அவர்களின் சுயபார்வையில், அப்போஸ்தலர்களில்லாமலேயே இந்த நிலையை அடைந்தார்கள் விருப்பக் கூற்றானது அவர்கள் ("எங்களையல்லாமல்" ஆளுகிறீர்கள்; 4:8). பவுலின் வாக்கியக் கூற்றானது அவர்கள் அப்படியொரு நிலையை உண்மையில் அடைந்திருந்தார்கள் - ஆனால் அவர்கள் அப்படி இருப்பதாக பவுல் நம்பவில்லை என்று மறைமுகமாகக் கூறினார்.*

*பிறகு, அதற்கு முரண்பாடாக, பவுல் அப்போஸ்தலரின் சூழ்நிலையை விளக்கப் படுத்துகிறார்: "மரணத்துக்கு குறிக்கப்பட்டவர்கள்" (4:9). அவர்கள் "பைத்தியக்காரர்," கொரிந்தியர் "புத்திசாலிகள்"; "பலவீனர்," அவர்கள் "பலவான்கள்"; "கனவீனர்," அவர்கள் "கனவான்கள்" (4:10). மேலும் அப்போஸ்தலர்கள் "பசியுள்ளவர்களும், தாகமுள்ளவர்களும், ... நிர்வாணிகளும், ... குட்டுண்டவர்களும், ... தங்க இடமில்லாதவர்களுமாய்" இருந்தார்கள் (4:11). தங்கள் சொந்த கைகளினால் வேலை செய்து பாடுபட்டார்கள். வையப்பட்டார்கள், துன்பப் பட்டார்கள், தூஷிக்கப் பட்டார்கள், இவர்கள் திரும்பி அவர்களுக்கு நன்மையே செய்தார்கள் (4:12, 13). மெய்யாகவே, கொரிந்தியர்கள் தங்களை "இராஜாக்களாக" எண்ணிக்கொண்டார்கள்; பவுலும் மற்றவர்களும் "உலகத்தின்குப்பையைப் போலவும்" "எல்லாரும் துடைத்துப்போடுகிற அழுக்கைப்போலவும்" இருந்தனர் (4:13).*

*வசனம் 14ல் தொடர்ந்து, சகோதரர்களை வெட்கப்படுத்தும்படி இதைச் சொல்லாமல், புத்தியாகச் சொல்வதாகக் குறிப்பிடுகிறார். பவுலும் மற்றவர்களும் பாடுபடும் அளவுக்கு நல்லவர்களில்லை என்றால், அவர்கள் "கழிவு" களாகத் தங்களைக் கண்டால் கொரிந்தியர்களும் அப்படிப் பட்டவர்களே என்பதை அவர்கள் அறிந்து கொள்ள வேண்டியவர்கள். ஆதலால், அவர்கள் தங்களைப் பற்றி மேட்டிமையான கண்ணோட்டத்தில் பார்ப்பது சரியல்ல. பவுலைப் போல், அவர்கள் தாழ்மையுள்ளவர்களாய் இருக்க வேண்டும்.*

*"உங்களுடைய பெலத்தை புரிந்து கொள்ளுங்கள்" (4:18-21 ஐக் காண்க). இந்த அதிகாரத்தின் நிறைவில், பவுல் மீண்டும் அவர்களுடைய இறுமாப்பை முன்னிறுத்தி, பேச்சிலே பெரிய வாய்களையுடையவர்களாயிருப்பது போல தங்களுடைய உரிமைகளில் இல்லை என்பதைச் சொல்லுகிறார். அவர்களில் சிலருடைய இறுமாப்பைக் குறித்து நேரடியாகவே அவர் பேசுகிறார். அவர்கள் "பேச்சைப் பேச முடியும்" ஆனால் "நடக்கையை நடக்க முடியவில்லை." அவர்கள் தங்களுடைய மேட்டிமை பாராட்டுதலை நிரூபிக்கும்படி சவால் விடுகிறார். "நான் வரும் போது யார் பலவான்" என்று அறிந்து கொள்வேன் என்று குறிப்பிட்டார். "என்ன வேடிக்கை! அவர்களுக்கு உள்ள வரங்கள் என்னவாக இருந்தாலும் சரி, பவுலுடன் அவர்கள் போட்டி போடமுடியவில்லை." ஒரு அப்போஸ்தலனுடன்*

போட்டியிட சவால் விடுதல் அவர்களைத் தாழ்மைப்படுத்தியிருக்க வேண்டும்.

இறுதியாக, பவுல், அவர்கள் தங்களை மாற்றிக் கொள்ளா விட்டால், அவர்களிடத்திலே அவர் "பிரம்போடு தான்" வரவேண்டும் என்றார். அப்படிச் செய்ய விரும்பவில்லை; அவர்களிடத்தில் சாந்தமுள்ள ஆவியோடு வரவே அவர் விரும்புகிறார் (4:21).[4]

பணிவிடைக்காரர்கள் பெரிய ஆட்களாகத் தங்களை காட்டிக் கொள்ளத் தேடமாட்டார்கள்; மாறாக, அவர்களுக்கு தாழ்மையான (அடக்க) சுபாவம் இருக்கும். அப்படியொரு சுபாவத்தை நாம் எப்படி அடைவது? கொரிந்தியர்களுக்கு பவுல் சொன்னவைகளை நாமும் பின்பற்றி நமக்குள்ளதெல்லாம் தேவனிடத்திலிருந்தே நமக்கு வருகிறது என்று உணர வேண்டும். அப்போஸ்தலர்களின் தியாகத்தை நாம் பாராட்டி, "ஒப்பிட்டுப் பார்ப்போமாகில்" கிறிஸ்துவுக்கு நாம் செய்திருப்பது கொஞ்சமே, பெருமை பாரட்ட எதுவுமில்லை என்பதை நாமே காணக் கூடும். நமது சொந்த பெலன் மற்றும் திறமையின் அளவீட்டை நாம் உணர வேண்டியவர்கள். அதன் பிறகே நாம் தாழ்மையுள்ளவர்களாகி, ஒரு ஊழியக்காரனாக இருக்க வேண்டிய முறைப்படி இருப்போம்.

## கிறிஸ்துவைப் பின்பற்றுதல்:
## ஒரு ஊழியக்காரனின் குறிக்கோள்

ஒரு ஊழியக்காரனின் குறிக்கோள் - இந்த வாழ்க்கையில் அவனுக்கு இருக்க வேண்டிய நோக்கமும் - வாழ்ந்து காட்டி அதினால் மற்றவர்களைப் பார்த்து, "என்னைப் பின்பற்றுங்கள்" என்று சொல்ல முடியும் என்பது அதிகாரம் 4-ன் ஆலோசனை. பவுல் எழுதுகிறார்,

> உங்களை வெட்கப்படுத்தும்படிக்கு நான் இவைகளை எழுதவில்லை, நீங்கள் எனக்குப் பிரியமான பிள்ளைகளென்று உங்களுக்குப் புத்தி சொல்லுகிறேன். கிறிஸ்துவுக்குள் பதினாயிரம் உபாத்தியாயர்கள் உங்களுக்கு இருந்தாலும், தகப்பன்மார் உங்களுக்கு அநேகர் இல்லையே; கிறிஸ்து இயேசுவுக்குள் சுவிசேஷத்தினால் நான் உங்களைப் பெற்றேன். ஆகையால் என்னைப் பின்பற்றுகிறவராகுங்களென்று உங்களுக்குப் புத்தி சொல்லுகிறேன். இதினிமித்தமாக, எனக்குப் பிரியமும் கர்த்தருக்குள் உண்மையுமுள்ள என் குமாரனாகிய தீமோத்தேயுவை உங்களிடத்தில் அனுப்பினேன்; நான் எங்கும் எந்தச் சபையிலும் போதித்து வருகிற பிரகாரம் கிறிஸ்துவுக்குள்ளான என் நடக்கைகளை அவன் உங்களுக்கு ஞாபகப் படுத்துவான் (4:14-17).

பவுல் கொரிந்தியர்களிடம் வைத்துள்ள அன்பினாலும், ஆவிக்குரிய பிள்ளைகள் என்ற அடிப்படையில் இப்படி வேண்டிக் கொள்கிறார் (4:14, 15). பிறகு அவர்களுடைய ஆவிக்குரிய தகப்பனாக, அவர், "என்னைப் பின் பற்றுகிறவராகுங்கள்" (4:16), என்று பூமிக்குரியத் தகப்பன் தனது வழிகாட்டலை பின்பற்றச் சொல்வது போல் சொல்கிறார் மேலும் தீமோத்தேயுவை அவர்களிடத்தில் அனுப்பி கொரிந்தியர்களுக்கு "கிறிஸ்துவுக்குள்ளான தனது நடக்கைகளை" ஞாபகப் படுத்தவும், அவர் "எங்கும் எந்தச் சபையிலும் போதித்து

வருகிற பிரகாரம்" (4:17), அவரை எதிலே பின்பற்றுவது என்பதை அறிந்து கொள்ளவும் சொல்லுகிறார்.

பவுல் தன்னைப் பின்பற்றும்படி சொன்னதால், அவர் தன்னை பூரணப் பட்டவர் என்று சொல்லவில்லை. பின்னதாக, 11:1ல், அவர் கிறிஸ்துவை பின்பற்றுவதால் மற்றவர்களும் பின்பற்றும்படி சிபாரிசு பண்ண முடிந்தது என்பதை தனது வாசகர்கள் அறிந்து கொள்ளச் செய்தார்.

ஒவ்வொரு ஊழியக்காரனுடைய குறிக்கோளும் வாழ்ந்து காட்டி அவனோ அவளோ மற்றவர்களைப் பார்த்து, "என்னைப் பின்பற்றுங்கள்" என்று சொல்ல முடியும்படி இருக்க வேண்டும். சில பிரசங்கியார்களும் பிரசங்கிக்கும் மாணவர்களும் ஒவ்வொருவரும் தங்களைக் கூர்ந்து கவனித்துக் கொண்டிருப்பதாக புகார் பண்ணுகிறார்கள். பவுல் இப்படிப்பட்ட புகார் ஒன்று செய்திருப்பார் என்று நான் சந்தேகிக்கிறேன். ஜனங்கள் அவருடைய வாழ்க்கையைக் குறித்த அனைத்து விஷயங்களையும் அறிந்து கொண்டு அவரைப் பின்பற்றுவதற்கு வாய்ப்பாக அமையும் என்பதால் அவர் சந்தோஷம் தான் அடைந்திருக்க வேண்டும். நாம் எப்படி இருக்க வேண்டுமோ அப்படி வாழ்ந்து இயன்றவரை சிறப்பாக வாழ்வோமானால், மற்றவர்கள் நம்மை கவனித்துப் பார்த்து நம்மை புரிந்து கொள்வதில் நாம் சந்தோஷமடைய வேண்டும். பின்பு நாமும் பவுலைப் போல, "என்னைப் பின்பற்றுங்கள்" என்று சொல்ல முடியும்.

## முடிவுரை

உள்ளூர் சபைகளில் பிரச்சனைகள் இருக்கும் போது, அவர்கள் சுய நலமிகளாய் மாற முற்படுகின்றனர். சுய நலம் என்கிற வலையிலிருந்து வெளியே வர ஒரு வழி ஊழியம் செய்தல். மற்றவர்களுக்கு ஊழியஞ் செய்யும்படி சகோதரர்கள் கவனம் செலுத்துகையில், பொருள் ரீதியாகவோ ஆவிக்குரிய முறையிலோ உதவ முற்படும் போது, வெறுப்படையச் செய்யும் அநேக பிரச்சனைகள் ஓய்ந்து போகும்.

ஊழியஞ் செய்யும்படி சபை கவனம் செலுத்துகையில், ஒவ்வொரு அங்கத்தினரும் ஊழியக்காரனாக மாற, சவால் எடுத்துக் கொள்ள வேண்டும் - எஜமானனாக அல்ல, முதலாளியாகவும் அல்ல, ஒரு ஊழியக்காரனாக. ஒவ்வொரு அங்கத்தினரும் ஊழியம் செய்ய வேண்டிய கடமையை உணர்ந்து, ஊழியக்காரனுக்குரிய இருதயத்தை பக்குவப்படுத்திக் கொள்ள வேண்டும். கிறிஸ்தவன் தன்னை தேவனுடைய உக்கிராணக்காரனாக நினைத்து, தாழ்மையான ஆவியுடனே ஊழியம் செய்து வாழ்ந்து காட்டினால், அப்பொழுது அவர் மற்றவர்களைப் பார்த்து, "என்னை பின்பற்றுகிறவராகுங்கள்" என்று சொல்லலாம்.

---

குறிப்புகள்

[1]"இருமாப்பு" எனும் பதம் புதிய அமெரிக்கன் ஸ்டாண்டர்ட் பைபிளில் "arrogance" என்று மொழி பெயர்க்கப் பட்டுள்ளது (1 கொரிந்தியர் 4:6ல் உதாரணமாக) வினைச் சொல்லின் வடிவமானது (ஃபுசியோ) பயன்படுத்தப் பட்டுள்ளது, இது "puffed up" என்று கிங் ஜேம்ஸ் வெர்ஸன் திருமறையில் கூறப்பட்டுள்ளது. புதிய ஏற்பாட்டில் ஏழு முறை மட்டும் இது காணப்படுகிறது. [2]Millard J. Berquist, *Studies in First Corinthi-*

*ans* (Nashville: Convention Press, 1960), 31. [3]*"இந்த நேரத்தில் [வசனம் 7] பவுலின் குற்றச் சாட்டுகள் கடித்துகுதறுவதற்கு ஒப்பான பழிச்சொற்களாக மற்றுமொரு உருவக (வஞ்சகப் புகழ்ச்சியாக)" மொழியில் சாடினார்.* (Carl Holladay, *The First Letter of Paul to the Corinthians,* The Living Word Commentary [Austin, Tex.: Sweet Publishing Co., 1979; reprint, Abilene, Tex.: A.C.U. Press, 1984], 62.) [4]*4:19-21ல் பவுல் அவர்களை மிரட்டுவது அவர் அவர்களுடைய விசுவாசத்தில் தகப்பன் என்பதை நிச்சயிக்கும் படியாக சொல்லப் பட்டது (4:14, 15). அவர்கள் கர்த்தருக்குள் தன்னுடைய பிள்ளைகளானதால், அவர்கள் அவரைப் போல் இருக்கும்படி எதிர்பார்த்தார். அதற்கு மாறாக, சிலர் "இறுமாப்புள்ளவர்களாய் மாறினார்கள்" (4:16); இதற்கு மேலும் அவருடைய போதனையைக் கேட்க அவர்கள் விரும்ப வில்லை. தங்களுடைய தகப்பனுடைய சொல் கேளாமல் புறக்கணிக்கும் கீழ்ப் படிதலில்லாத பிள்ளைகளைப் போன்றிருந்தார்கள். அவர்கள் மாறவில்லையெனில், அவர்களை தண்டிக்க வேண்டியது தான் என்று குறிப்பாய் உணர்த்துகிறார் (4:21)!* (Richard E. Oster, Jr., *1 Corinthians,* The College Press NIV Commentary [Joplin, Mo.: College Press Publishing Co., 1995], 120-24.)